செ.வெ.எண்: 469/2020 நாள்: 18.10.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற 12 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பதியேற்றுகொண்டார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்வு நாள் கூட்டரங்கில் ஊரக உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்ற 12 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பதியேற்றுகொண்டார்கள்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாதனூர் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.1-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.சி.சரிதா அவர்கள், வாட்டு எண்.2-ன் மாவட்ட ஊராட்சி உறுப்பினராக திருமதி.சசிகலா அவர்கள், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.3-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.என்.பிரியதர்ஷினி ஞானவேல் அவர்கள், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.4-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.ச.சத்தியவாணி அவர்கள், வார்டு எண்.5-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.சு.ஜெயா அவர்கள், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.6-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.ஜெ.சிந்துஜா அவர்கள், வார்டு எண்.9-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.கவிதா தண்டபாணி அவர்கள், கந்திலி ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.10-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திரு.இரா.சூரியகுமார் அவர்கள், வார்டு எண்.11-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திரு.சி.கே.சுப்பிரமணி அவர்கள், வார்டு எண்.12-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திரு.கே.ஏ.குணசேகரன் அவர்கள், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் வார்டு எண்.8-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திரு.ஆர்.சுபாஷ்சந்திரபோஸ் அவர்கள், வார்டு எண்.13-ன் மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினராக திருமதி.கே.சத்தியவாணி அவர்கள் ஆகிய 12 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களாக பதியேற்றுகொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 12 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துகொண்டார்கள். மேலும் நமது மாவட்டத்திலுள்ள மாதனூர் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், நாட்றம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கந்திலி ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய 6 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைத்து பொது மக்களிடம் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் அவசியம் குறித்து எடுத்து கூறவேண்டும். மேலும் பொது மக்கள் 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கு மாவட்ட நிர்வாகத்திற்கு நல்ஒத்துழைப்பை நீங்கள் அனைவரும் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.உமாமகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.செல்வன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) திரு.ஹரிஹரன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.இராஜசேகர், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத் தலைவர் திரு.இராஜேந்திரன் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**